Australian Government
Department of Social Services

# வீட்டு வன்முறையும் குடும்ப வன்முறையும்

DSS1834.02.16

தமது குடும்பம் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கவேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புவர்.



நமது வீட்டிலும், நமது சமூகத்திலும் வன்முறைக்கு ஆளாகாமல் இருப்பதற்கான உரிமை நம் அனைவருக்கும் உள்ளது.



அவுஸ்திரேலியாவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உள்ளது.




வீட்டில் நடந்தாலும், குடும்ப வன்முறை, பாலியல் தாக்குதல், வலுக்கட்டாயத் திருமணம் ஆகியவை அவுஸ்திரேலியாவில் குற்றங்களாகும். தாக்குவது மட்டும் குடும்ப வன்முறையல்ல. கோபமாகக் கத்துவது, குழந்தைகளை மிரட்டுவது, குடும்பப் பணத்தைக் கட்டுப்படுத்துவது, அல்லது நண்பர்களையும் குடும்பத்தினரையும் பார்ப்பதிலிருந்து வாழ்க்கைத் துணையைத் தடுப்பது ஆகியவையும் குடும்ப வன்முறைகளாகலாம்.



அவுஸ்திரேலியக் காவல் துறையினர் பாதுகாப்பானவர்கள், நம்பத் தகுந்தவர்கள். நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருமோ உடனடி ஆபத்தில் இருந்தால், காவல் துறையுடன் கதையுங்கள், அல்லது அவர்களை ‘000’ எனும் இலக்கத்தில் அழையுங்கள்.




நீங்கள் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க உதவக்கூடிய கலாச்சார உணர்வுகளைக் கருத்திற் கொள்ளும் சேவைகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.




பின்வரும் விடயங்களில் நீங்கள் உதவி நாடலாம்:

- வீட்டு, குடும்ப வன்முறைகள்
- பாலியல் தாக்குதல்
- வலுக்கட்டாயத் திருமணம்
- குழந்தைத் துஷ்பிரயோகம்
- தூசனப் பேச்சு




நீங்கள் ஆபத்திலிருந்தால் ‘000’ எனும் இலக்கத்தில் காவல் துறையினரை அழையுங்கள்.

அந்தரங்கமான முறையில் உங்களுக்கு ஆலோசனையும் தகவல்களும் தேவைப்பட்டால், **1800 737 732** எனும் இலக்கத்தில் **1800 RESPECT** ஐ அழையுங்கள். அல்லது **www.1800RESPECT.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

வலுக்கட்டாயத் திருமண ஆபத்தில் நீங்கள் இருந்தால்,‘அவுஸ்திரேலிய சமஷ்டி காவல் துறை’யை**(Australian Federal Police) 131 237** எனும் இலக்கத்தில் அழையுங்கள்.

மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் **131 450** எனும் இலக்கத்தில் இலவசமாக ‘மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை’**(Translating and Interpreting Service)**யை அழையுங்கள்.

(C) CALDWorld M: 0419525119